



புராண முக்கியத்துவம் உடைய வழி. ஐயப்பன் புலிப் பால் கொண்டு வரச் சென்றதும், எதிரிகளை வெற்றி கொள்ளச் சென்றதும், பந்தள மன்னன் திருக்கோயில் நிர்மாணிக்கச் சென்றதும் இவ்வழியேதான் என்பது ஐதீகம். சபரிமலை செல்லும் பக்தர்கள் தம் ஆசாரங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு உகந்த வழியும் இதுவே. கன்னி ஐயப்பன்மார் கட்டாயமாகச் செல்ல வேண்டிய பாதை இது. எருமேலியிலிருந்து சபரிமலைச் சந்நிதானம் சுமார் 40 மைல்.

### எலவந்தாவளம்

புதுச்சேரி ஆற்றோரம் அமைந்த தாவளம். விலங்குகள் நீர் பருக வரும் இனிய காட்சியுடையது. நல்ல தீர்த்தம். கரிமலை அடிவாரம் இது. ஐயப்பன்மார் கஞ்சி குடித்துவிட்டு, உடம்பை எளிதாக்கிக் கரிமலை ஏறுவதற்குத் தோதான இடைத் தங்கல்.

## ஐ

### ஐயப்பன்

‘ஐ’ என்பது தலைவன் எனப் பொருள்படும். எனவே ஐயன், ஐயனார், ஐயப்பன் என்பன தலைமைப் பண்பு குறித்த பெயர்கள். ஐயப்பனைத் தர்மசாஸ்தாவின் அவதாரமாகக் காண்பது ஒரு பார்வை. ஹரிஹர சுதனாகப் பார்க்கும் இப்புராணப் பார்வைக்குத் தத்துவப்பின்புலமும் உண்டு. ‘‘....நாராயணனின் காருண்ய லாவண்யமும், பரமேசுவரனின் சாந்த ஞானமும் ஒன்று சேர்ந்தவுடன் ஒரு மகா தேஜஸ்- ஒரு பெரும் ஜோதி பிறந்தது. இந்த தேஜஸே ஐயப்பனாக உருக்கொண்டது’’ என்று விளக்குவார் காஞ்சி முனிவர். மற்றொரு பார்வை நாட்டுப்புற வழக்காற்றில் முகிழ்ப்பது. வரலாற்று நாயகனாக, இளம் வீரனாக, மலையாள மண்ணைக் காத்தருள்பவனாக, உதயணனால் அழிக்கப்பட்ட சபரிமலைக் கோயிலை மீண்டும் அமைத்து அத்தெய்வத் திருவுருவில் இரண்டறக் கலந்திடுவோனாகக் காணும் காட்சி அது. இவ் இரண்டின் இசைவில் ஓர் உயிர்ச் சக்தியாக, ஆன்மீக ஆற்றலாக, கேரள மண்ணின் மணமாக ஐயப்ப வழிபாடு ஒளிர்கிறது.

### ஐயப்பன் நாடகம்

நவாப் டி.எஸ்.ராஜமாணிக்கம் நாடகம் மூலம் ஐயப்பன் புகழ் பரப்பினார். சுமார் 1400 முறை ஐயப்பன் நாடகம் நடத்தினார். 1942-46 ஆம் ஆண்டுகளில் கேரளத்தில் நாடகங்கள் நடத்திய போது சபரிமலை யாத்திரை அவரைக் கவர்ந்தது. கோட்டயத்தில் ஐயப்பசாமி என்பாரின் வேண்டுதலுக்கிணங்க முதன் முதலில் 1944-இல் ஆலப்புழையில் ஐயப்பன் நாடகம் அரங்கேறியது. அவர் ஐயப்ப பக்தரானார். தமிழகத்தில் முதன் முதலில் நெல்லை மாவட்டம் கல்லிடைக் குறிச்சியில் இந்நாடகம் நிகழ்த்தப்பட்டது. மதுரையில் பெரும் வரவேற்பினைப் பெற்றது.

## ஓ

### ஓரக்குழித்தீர்த்தம்

மகர சங்கராந்தி விழாவில், சபரிமலையில் மகர விளக்கு தரிசனம் பெற்ற நிறைவுடன் ஐயப்ப பக்தர்கள் மறுநாள் நீராடும் தீர்த்தம்.

## க

### கடுத்த சுவாமி

மாளிகைப் புறத்தம்மன் கோவில் சுவர்க்கட்டில் கடுத்த சுவாமியின் பிரதிஷ்டை உள்ளது. கடுத்த சுவாமிக்கு கஞ்சா, கதலிப்பழம், வறுத்த பொடி, அவல், பொரி, தேங்காய், சர்க்கரை, முந்திரிப்பழம், கற்கண்டு போன்றவற்றை காணிக்கையாகக் கொடுப்பர்.

### கரிமலை

இஞ்சிப்பாறைக் கோட்டையிலிருந்து கிழக்கு நோக்கி யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் கரிமலை அடிவாரத்தினை அடைவர். இது நெடிய யாத்திரை; கடின யாத்திரை. பல தோடுகளைக் கடந்து செல்ல வேண்டும். நெடுந்தொலைவு நடந்தபின் கரிமலைத் தோட்டினை அடையலாம். இது கரிவலந்தோடு எனவும்படும். இத்தங்கிடம் நீராடவும், ஓய்வு பெறவும் வசதியானது. மலையேற்றத்திற்கு தயாரெடுக்க உகந்த இடம்.

‘‘கரிமலை ஏற்றம் கடினம் கடினம்’’ எனப்பாடுவது உண்மையே. அழுதா மேட்டினை அடுத்தது கரிமலை ஏற்றம். அதனினும் இது கடினமானது. ‘‘ஏற்றி விடய்யா, தூக்கி விடய்யா’’ எனும் கோஷங்கள் அர்த்த புஷ்டி உடையவை. ஓய்வெடுக்காது ஒரே யடியாக ஏறுதல் இயலாது. மலை எட்டுத் தட்டுகளாக அமைந்துள்ளது. ஏழாவது தட்டு முடிந்தபின் வரும் பகுதி கரிமலை மேடு எனப்படும். இங்கு கரிமலைநாதர் தரிசனம் பெறலாம். மஞ்சள் பொடி தூவியும், கற்பூரம் ஏற்றியும் பக்தர்கள் வழிபடுவர். வன துர்க்கைக்கும், கொச்சு கடுத்தைக்கும் இங்கு கோயில்கள் உள்ளன. தேங்காய் உடைத்தும் மஞ்சள் பொடி தூவியும் வழிபாடு செய்வர். வெடி வழிபாடும் உண்டு. இங்கு நீர் ஊறிவரும் கிணறு உண்டு. ஐயப்பன் அம்பினால் உருவாக்கிய ஊற்று என்பது ஐதீகம்.

கரிமலை ஏற்றத்தை விடக் கடினமானது கரிமலை இறக்கம். மிகவும் செங்குத்தான இறக்கம். ‘தேக பலம் தா... பாத பலம் தா’ எனும் நெகிழ்வான சரண ஒலிகள் அங்கு கேட்கும். கரிமலை இறக்கம் சென்று சேருமிடம் வலியான வட்டம், சிறியான வட்டம் எனும் பம்பை நதிக்கரை தாவளங்கள்.

### கல்லிடுங்குன்று

சபரியாத்திரையில் அழுதை மேடு முடிந்தபின் வரும் இடம். ஐயப்பன்மார் அழுதை நதியில் நீராடி ஒரு சிறு கல்லெடுத்து வருவர். அதனை அவர்கள் இடும் இடம் இது.

வதையுண்ட மகிஷி உடல் அழுதா நதியோரம் விழுந்தது என்றும், அது வளர்ந்து சந்திர சூரியரையும் மறைத்திடும் என அஞ்சி தேவர்கள் அந்த உடல் மீது கல் எறிந்து மூடினர் என்றும், அந்நினைவின் நீட்சியே கல்லிடுதல் என்றும் கூறுவர். மகிஷியின் சாபம் நீங்கி அசுரத் தன்மை அகலுதற்பொருட்டு ஐயப்பன் ஆணை வழிச் செய்யப்படும் சடங்கு என்றும் ஒரு கருத்து உண்டு. உதயணன் கோட்டையைக் கைப்பற்றச் சென்ற போது அகழியை நிரப்புதற் பொருட்டு எறியப்பட்ட கற்களின் நினைவில் இச்சடங்கினைச் செய்வதாகவும் கூறுவர். எவ்வாறாயினும் தீமையினை வென்ற ஐயப்பனின் கைங்கரியத்தில் ஐயப்ப பக்

இருமுடிப்பிரியனே... சரணம் ஐயப்பா ❁ இன்னல் தீர்ப்பவனே... சரணம் ஐயப்பா